## JAMAL MOHAMED COLLEGE(Autonomous)
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

# Graphic Design

## Graphic Design - கணினி வரைகலை டிசைனிங் செய்ய எளிமையாக கற்றுக்கொள்வது எவ்வாறு?

**விசுவல் டிசைன் - கணினி வரைகலை டிசைனிங் செய்ய எளிமையாக கற்றுக்கொள்வது எவ்வாறு?**
**வரைகலை டிசைனிங் என்றால் என்ன?**

விசுவல் டிசைன் - கணினி வரைகலை

**முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்**
**Dr. Ragunathan, Assistant Professor**



**விசுவல் காட்சி**

நாம் நினைப்பதை எப்படி விசுவல் காட்சியாக வெளிப்படுத்துவது இன்றைய காலகட்டம் தொழில்நுட்பம் நிறைந்தது அதாவது கணினி வரைகலை மூலம் பல்வேறு கணினி மென்பொருளை கொண்டு வரையலாம் மற்றும் எளிதில் வெளிப்படுத்தலாம். விளம்பரத் துறை சார்ந்த வேலைகள். லோகோ டிசைன், பிராண்டிங் டிசைன், போஸ்டர், அலுவலகங்களுக்கு சுவரோவியங்கள் போன்றவைகளிலும் இக்கலை பயன்படுத்தப்படுகின்றன.

இதை கற்றுக்கொள்வதற்கு முன்பு நீங்கள் நல்ல கற்பனை வளத்தை பெருக்கும் வண்ணம் இத்துறை பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும் அதன் பின்னர் தான் உங்களுக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுக்கவேண்டும் . அச்சு ஊடகத்தில் கணினி வடிவமைப்பின் பங்களிப்பு அதிகம் என்று உங்களுக்கு தெரியும் நாம் தனியாக தனித்தியங்க முடியும். மற்றவை அனைத்தும் குழு சார்ந்தது.

**வடிவமைப்பு வகைகள்:**

**அட்டைப்பட புத்தக வடிவமைப்பு**

பல பக்கங்களில் எழுதப்பட்டிருக்கும் கதையை புரிந்து கொண்டு அதை அட்டை முன் பக்கம் அதாவது ஒரே பக்கத்தில் வரைய வேண்டும் அவ்வாறு அட்டைப்படங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

இதில் ஆரம்ப கட்டம் DTP. இதில் கோரல்டிரா மற்றும் ஃபோட்டோஷாப். இவற்றைக்கொண்டு படங்கள்வரைய, விசிட்டிங் கார்டில் இருந்து புத்தகங்கள் வரை எல்லாவற்றையும் வடிவமைக்க பயன்படுகிறது. அச்சு தொழிலுக்கு மிக முக்கியமான மென் பொருட்கள் இவை இன்றும் சந்தையில் முன்னிலை வகுக்கின்றது என்று கூறலாம்.

**சின்னம் - லோகோ டிசைன்**

தனி நபர் அல்லது நிறுவனங்களை கொண்டு கணினி மென்பொருள் உதவியுடன் வரைந்து கொள்ள வேண்டும்.

உங்கள் விசிட்டிங் கார்டுக்கு தேவையான படத்தை தேர்ந்து எடுத்துக்கொள்ளவேண்டும் மேலும் உங்களிடம் இல்லாத படங்கள் தேவைப் பட்டால் இணைத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும். பிறகு உங்கள் பெயர் மற்றும் உங்கள் கம்பெணி பெயர் மற்றும் நிறுவனத்தின் லோகோ போன் நம்பர் முழு விலாசம் மற்றும் மின்னஞ்சல் முகவரி மற்றும் இணையதள முகவரி ஆகியவற்றை டைப் செய்து கொள்ளவும். வர்ணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கலாம்.

உதாரணத்திற்கு ஒருவர் புகைப்பட நிறுவனம் அல்லது தனி புகைப்பட கலைஞரஎன்றால் அவரது நிறுவனத்திர்க்கான லோகோவைப் பார்த்தால் அதில்புகைப்பட கருவி அல்லது புகைப்பட சம்மந்தமான பொருளை வேறு ஏதேனும் ஒன்றை வரைந்திருக்கவேண்டும் .

லோகோ உருவாக முதலே நிறுவனம் உருவாகி இருந்தால் அதனை பற்றி நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும் இக்கால கட்ட "ட்ரெண்டிங்" ஐயும் அதன் நிலைத்தன்மையையும் கருத்திலெடுக்க வேண்டும்.

அதே போன்ற துறையை பற்றியும் இணையத்தின் வாயிலாக துறையிலுள்ள ஏற்கனவே உருவான சின்னங்கள் மற்றும் போட்டியாளர்களின் சின்னங்களை ஆராய்ந்து அதிலுள்ள குறை நிறைகளை தெரிந்துகொள்ள வேண்டும்.

வணிகத்துக்கு பயன்படுத்தப்படுகின்ற லோகோக்களை உற்று கவனிக்க வேண்டும். அதன் உள்ளீடு மற்றும் யோசனையை பற்றி புரிந்து கொண்டு அதை காட்டிலும் உங்களால் புதியதாய் செய்ய முடியும் என்றால் அதை அப்படியே ஒரு காகிதமும், பென்சிலும் கொண்டு வரைந்து வைத்துக்கொள்ள வேண்டும்

**அழைப்பு அட்டை (விசிட்டிங் கார்டு)**

விசிட்டிங் கார்டை பொறுத்தவரையில் டிடிபி மென்பொருட்களாக கருதப்படும் போட்டோஷப்பில் அழைப்பு அட்டையை செய்துகொள்ளமுடியும் மேலும் பல் வேறு மென்பொருள் இன்று சந்தையில் கிடைக்கின்றன.

**லெட்டர்ஹெட்**

லெட்டர் ஹெட் டிசைன் எப்படி தயார் செய்வது என்பது பற்றியும் அவற்றில் என்னென்ன இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பார்ப்போம்.

லெட்டர்ஹெட் டிசைன் லெட்டர்ஹெட் தயாரிக்கும் போது ஒன்றை மட்டும் மனதில் வைத்து கொள்ளவேண்டும் இரு வண்ண முறையில் தயார் செய்ய வேண்டும் ஏனெனில் தேவையை பொறுத்து லெட்டர் ஹெட்டை மல்டி கலர் அல்லது ஆப்செட் முறையில் அச்சடித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் டிசைன் செய்யும் லோகோவானது முடிந்தவரை நீங்கள் எந்த பொருளை, நிறுவனத்தை செய்ய நினைக்கிறீர்களோ அவை சம்பத்தப்பட்டவையாக இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.

முகவரியை எழுதி முடித்த பிறகு, இறுதியாக அவற்றின் மேற்புரத்தில் கோடு ஒன்றை வரைந்து கொள்ளுங்கள்.

வடிவமைப்பாளர் செய்ய வேண்டியவைகள்

புத்தங்களைப் படித்து, வடிவமைப்பை நீங்களாக டிசைன் செய்துக்கொள்ள வேண்டும் அல்லது மற்றும் க்ரியேட்டிவா வெரைட்டியாக வரைவதை எளிதில் கற்றுக்கொள்ள வேண்டும். விஷுவல் ஆர்ட் சார்ந்த விஷயங்கள் எப்போதும் பார்த்துகொண்டே இருக்க வேண்டும் மற்றும் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் பல புத்தகங்களை படிக்க வேண்டும்.

**பயன்படும் மென்பொருட்கள்**

அடோப்போட்டோஷாப்
பேஜ் மேக்கர்
அடோப் இல்லஸ்லேட்டர்
கோரல்டிரா

நன்றியோடு அன்பு நண்பன்

**பேரா முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்**

Posted 26th April 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: GRAPHIC DESIGN
Posted 17th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: STUDY MATERIAL